சூறையாடப்பட்ட ரீட்டா...

# வேண்டும் சி.பி.ஐ. விசாரணை!

சென்னை – திருவொற்றியூரைச் சேர்ந்த ரீட்டாவுக்கு அடுக்காக நேர்ந்த கொடுமைகள் பற்றியும் காவல்துறையில் உள்ள சில கறுப்பு ஆடுகளை விபசாரத் தொழிலுக்குத் துணை போவது பற்றியும் ஜூ.வி-யில் அடுத்தடுத்து செய்திகள் வெளியிட்டு வருகிறோம்.

போலீஸ் தரப்பில் ரீட்டா விவகாரம் குறித்து ரகசியமாகப் புலன் விசாரணை நடந்து வந்தாலும், இப்படியொரு கொடுமை நடந்தது பற்றி போலீஸ் தரப்பில் பத்திரிகையாளர்களுக்கு உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ இல்லை. இந்த நிலையில், தீபாவளி அன்று முதல் திருப்பம்... செஞ்சி காவல்நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த முதல் தகவல் அறிக்கையைப் பதிவுசெய்தவர் – செஞ்சி உதவி போலீஸ் சூபரின்டென்டண்ட் தினகரன்.

நாம் அவரிடம் பேசினோம்.

"ரீட்டா சார்பில் ஒரு வழக்கறிஞரும் அதன் பிறகு ரீட்டாவின் அம்மா லீலாவதியும் சென்னையில் உள்ள போலீஸ் உயர் அதிகாரிகளுக்குப் புகார் மனு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், செஞ்சி போலீஸ் ஸ்டேஷன் எல்லைக்குள் நடந்ததாக அவர்கள் கூறும் சம்பவங்கள் பற்றி எங்களிடம் எந்தப் புகாரும் தரவில்லை.

ரீட்டா இப்போது மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அந்த மருத்துவமனையிலிருந்தே எனக்குத் தகவல் வந்தது. இது மிகவும் சென்சிட்டிவ்வான வழக்கு என்பதால், நானே நேரடியாக மதுரை சென்று விசாரணை மேற்கொண்டேன்.

ரீட்டா இன்னமும் மனோ ரீதியான குழப்பங்களுடன் இருப்பதால், அவர் ஏதும் பேசும் நிலையில் இல்லை. சிகிச்சை தரும் மருத்துவரிடம், அவர் 'மனோ ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்' என்பதற்கான சான்றிதழை பெற்றுக்கொண்டேன். அதன் பின், ரீட்டாவின் தாயார் லீலாவதியிடம் புகார் வாங்கி, அதன் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்திருக்கிறேன்.

ஆத்தூரிலிருந்து ரீட்டாவைக் கொண்டுவந்து விற்றதாகக் குற்றம் சாட்டப்படும் போலீஸ்காரர் முருகேசன், ரீட்டாவை விலைக்கு வாங்கி விபசாரத்தில் ஈடுபடுத்த முயன்ற சாந்தி மற்றும் செஞ்சி கிளைச் சிறையில் பணிபுரியும் ஊழியர்கள் ஆகியோர்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறையில் பணிபுரியும் ஊழியர்களின் பெயர் தெரியாததால், அடையாள அணிவகுப்பு நடத்தியே, யார் யார் குற்றவாளிகள் என்பதை முடிவு செய்ய வேண்டும். ரீட்டா குணமடைந்த பிறகே இது சாத்தியம்.

கடத்தல், கற்பழிக்க முயற்சி, வலுக்கட்டாயமாக ஒரு பெண்ணை விபசாரத் தொழிலில் ஈடுபடுத்துதல், நீதிமன்றக் காவலில் இருக்கும்போது கற்பழித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கான பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளோம்.

ஆனால், நாங்கள் வழக்கைப் பதிவு செய்துவிட்டு விசாரணையை உடனே தொடங்க முடியாத நிலைமை. குற்றம்சாட்டப்பட்டுள்ளது போலீஸாரும் சிறைக் காவலர்களும் என்பதால், முதலில் சப்-கலெக்டர் விசாரிக்க வேண்டும். அவரது விசாரணை அறிக்கை வந்த பிறகே விசாரணையை நாங்கள் தொடர முடியும். எனவே முதல் தகவல் அறிக்கையைத் திண்டிவனம் சப்-கலெக்டருக்கு அனுப்பிவிட்டோம்..." என்று நம்மிடம் சொன்னார் தினகரன்.

ஆனால், ரீட்டாவுக்கு நீதி கேட்டுப் போராடுகிறவர்கள், சப்-கலெக்டர் விசாரணை குறித்து அவநம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

"ரீட்டாவின் உடல் காயங்களைப் பார்த்துத்தான் நீதிபதி கல்பனா, ரீட்டாவை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பிவைத்தார். ஆனால், மருத்துவப் பரிசோதனை அறிக்கையோ 'ரீட்டா கற்பழிக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை' என்கிற ரீதியில் வந்துள்ளதாகத் தெரிகிறது.

> *இவ்வளவு பிரச்னைகளுக்கு நடுவில் போலீஸ் தொடர் ரெய்டு நடத்தி, ஜே.கே. ஏரியாவைக் கிட்டத்தட்ட 'சீல்' வைத்துவிட்டது! ரீட்டாவை விலைக்கு வாங்கி விபசாரத்தில் ஈடுபடுத்த முயன்ற சாந்தி உள்ளிட்ட ஏஜெண்டுகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். சாந்தி இப்போது 'தினமும் உளுந்தூர்பேட்டை கோர்ட்டில் கையெழுத்துப் போட வேண்டும்' என்ற நிபந்தனையோடு ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார்!*
>
> *சாந்தியிடம் விழுப்புரம் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணையில்தான் 'ஆத்தூரிலிருந்து ரீட்டா எப்படி திண்டிவனம் கொண்டு வரப்பட்டார்' என்பதற்கான க்ளூ கிடைத்துள்ளது!*
>
> *சாந்திக்கு அனிதா என்ற பெயரில் ஒரு மகள் இருக்கிறார். அந்தப் பெண் ஆத்தூரில் இதேபோல பெண்களை வைத்து ஒரு லாட்ஜில் விபசாரத் தொழில் செய்து வருகிறாராம். இருவரும் அடிக்கடி தங்கள் ஏரியா தொழில் நிலவரம் பற்றிக் கடிதம் மூலம் தகவல் பரிமாறிக் கொள்வது உண்டாம்! [இரண்டு பேருக்குமே எழுதப் படிக்கத் தெரியாது! தங்களிடம் வரும் ரெகுலர் கஸ்டமர்களைக் கடிதம் எழுதவும் பிரித்துப் படிக்கவும் பயன்படுத்திக் கொள்வார்களாம்!]*
>
> *திண்டிவனத்திலும் ஆத்தூரிலும் தாயும் மகளும் தொழிலில் ஈடுபடுத்தும் பெண்கள், அங்குள்ள கஸ்டமர்களுக்கு 'பழசாகி'விட்டால், புதுச் சரக்கு வந்திருப்பதாகக் காட்டுவதற்காக பரஸ்பரம் இந்தப் பெண்களை இடம் மாற்றிக் கொள்வார்களாம்! இந்த பரிமாற்றத்தில்தான் ரீட்டா ஆத்தூரிலிருந்து திண்டிவனத்துக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பது முதல்கட்டத் தகவல். இதில் முருகேசன் என்ற பெயருடைய போலீஸ்காரரின் பங்கு என்ன என்பதையும் விசாரித்து வருகிறார்கள் உயர் போலீஸ் அதிகாரிகள்.*





ரீட்டா

**சிதம்பரம் பத்மினி, அத்தியூர் விஜயா ஆகிய இருவரும்தான் பேரணிக்குத் தலைமை தாங்கப் போகிறார்கள்!**

ஆனால், ரீட்டாவை ஜாமீனில் கூட்டி வந்து ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த எங்களால் இதை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

ரீட்டாவை அந்தத் தனியார் மருத்துவமனையில் பரிசோதித்து, உடற்காயங்களைப் பட்டியலிட்டார்கள். இடது முழங்காலுக்குக் கீழே ஒரு அங்குல நீளத்துக்குப் பெரிய காயம் இருந்தது. அதிலிருந்து ரத்தமும் சீழும் ஒழுகி, அந்தக் காலே வீங்கியிருந்தது. வலது காலிலும் பாதத்திலும் ரத்தக் காய வடுக்களும் சிராய்ப்புகளும் இருந்தன. அடிவயிற்றில் நகக்கீறல் வடுக்களும் இருந்தன. இரு மார்பகங்களிலும் நகக்கீறல் காயங்கள் இருந்தன. இடது மார்பகத்தில் பற்களால் கடித்த காயங்களும் இரண்டு இடத்தில் இருந்தன. பிறப்புறுப்பில் எரிச்சலும் வலியும் இருப்பதாகச் சொல்லிச் சொல்லி அழுதார் ரீட்டா.

இவ்வளவையும் 'ஒன்றுமில்லை' என்று மறைக்க, அரசு மருத்துவர்களின் துணையோடு போலீஸ் முயற்சிக்கிறது. 'இவ்வளவும் செஞ்சி கிளைச் சிறையில் பலாத்காரம் செய்யப்பட்டதால் நேர்ந்தவை அல்ல... அவர் விபசாரத் தொழில் செய்தபோது நேர்ந்திருக்கலாம்' என்று சொல்வதற்கு போலீஸ் முயற்சிக்கலாம்.

செஞ்சி கிளைச் சிறைக்குக் கொண்டு செல்லப்படுமுன், நீதிபதி முன்பு ஆஜர்படுத்தப்பட்டபோது ரீட்டாவின் உடலில் இந்தக் காயங்கள் எதுவுமில்லை. கிளைச் சிறையில் நடந்த காமத் தாக்குதலில்தான் காயங்கள் ஏற்பட்டுள்ளன. கிளைச் சிறையில் அந்தக் கொடுமை நடந்ததற்கு மறுநாள் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ரீட்டாவைக் கூட்டிப்போய் சிறைக் காவலர்களே குளுகோஸ் ஏற்றினார்கள். அதுமட்டும் செய்திருக்காவிட்டால் ரீட்டா செத்தே போயிருக்கக்கூடும்.

இப்போது பிரச்னை என்னவென்றால், நடந்த எல்லாச் சம்பவங்களுக்கும் நேரடி சாட்சியங்கள் ஏதுமில்லை. சந்தர்ப்ப சாட்சியங்களையும் சூழ்நிலைகளையும் வைத்தே விசாரணையை நடத்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய ஒரு விசாரணையை சப்-கலெக்டர் செய்வது சரியாக இருக்காது. இது போலீஸ் ஏஜென்ஸி ஒன்று செய்யவேண்டிய வேலை. அதனால்தான் நாங்கள் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறோம்..." – இப்படி நம்மிடம் சொன்னார், ரீட்டாவுக்கு நீதி கேட்டுப் போராடும் அனைத்துக் கட்சி மற்றும் இயக்கங்களின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான பேராசிரியர் கல்யாணி.

ரீட்டாவுக்காக இந்த அமைப்பின் சார்பில் வரும் 28-ம் தேதி திண்டிவனத்தில் பேரணியும் பொதுக் கூட்டமும் நடத்தப்பட உள்ளது.

'திண்டிவனத்துக்கு அவமானச் சின்னமாக இருக்கும் ஜோகி குடிசை பகுதியில் விபசாரத் தொழில் ஒழிக்கப்பட வேண்டும்' என்பதும் இவர்களது கோரிக்கை!

பெண்ணுரிமை இயக்கங்கள் நடத்திவரும் பிரபலப் பெண்மணிகள் இந்தப் பேரணியில் பேசுகிறார்கள். சிதம்பரம் பத்மினி, அத்தியூர் விஜயா ஆகிய இருவரும்தான் பேரணிக்குத் தலைமைதாங்கப் போகிறார்கள்!

இந்தக் கூட்டமைப்பின் இன்னொரு ஒருங்கிணைப்பாளரான வக்கீல் லூர்து சேவியர், "நகரின் இதயப் பகுதியில் இருக்கும் இந்த ஜே.கே. ஏரியாவில் ரீட்டாவைப் போல் இன்னும் எத்தனை அப்பாவிப் பெண்கள் சிக்கிச் சீரழிந்து போனார்களோ தெரியவில்லை. அந்தப் பகுதியில் சிக்கித் தவிக்கும் பெண்களிடம் ஒரு முழுமையான விசாரணை நடத்தினால், எத்தனையோ ரீட்டாக்களின் கண்ணீர்க் கதைகள் வெளிவரும்" என்கிறார்.

– **நமது நிருபர்**